ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1771/22 - 2012 අගෝස්තු මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.16

*1771/22 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 150/32* (III).

**(404 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுக் கடன், அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்**

(404 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுக் கடன், அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் உள்நாட்டுக் கடன், அபிவிருத்தி ஆணையாளர்களால் ஆக்கப்பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதி.

உள்நாட்டுக் கடன், அபிவிருத்தி ஆணையாளர்கள்.

கொழும்பு,
2012, யூன் 29.

ஒழுங்குவிதி

1996, சனவரி 10 ஆந் திகதிய 905/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 1996, மே 10 ஆந் திகதிய 922/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியால் திருத்தப்பட்டவாறான 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்நாட்டுக் கடன், அபிவிருத்தி (பலதரப்பட்ட) ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) 11 ஆவது ஒழுங்குவிதியில், அதன் (2) ஆம் பந்தியினை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும் :-

> "(2) ஆணையாளர்கள், 10 ஆவது ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்துக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் ஆகக்கூடியது எண்பது சதவீதம் (80%) வரை, கடன்களை வழங்கலாம் :
>
> ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஏதேனும் கடனானது-
>
> (அ) இரண்டு மில்லியன் ரூபாவிற்கு மேற்படாத தொகையாகவிருப்பின், தவிசாளரின் விதப்புரையின் மீது ஆணையாளர்களினால் வழங்கப்படலாம் ;
>
> (ஆ) இரண்டு மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஆனால் பத்து மில்லியன் ரூபாவிற்கு மேற்படாத தொகையாகவிருப்பின், ஆணையாளர்களால் வழங்கப்படலாம் ; அத்துடன்
>
> (இ) பத்து மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையாவிருப்பின், அமைச்சரால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரிக்கான பிரதிச் செயலாளரின் விதப்புரையின் மீது ஆணையாளர்களால் வழங்கப்படலாம்." ;

(2) 12 ஆவது ஒழுங்குவிதியில் "ஆணையாளர்கள்" என்னும் சொல்லுக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

> " "தவிசாளர்" என்பது, கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர்கள் சபையின் தவிசாளர் எனப் பொருள்படும் ; ".

8- 881